**தன்னாட்சி**
***(உள்ளாட்சி உங்களாட்சி)***
**பதிவு எண்: 272/2018**
69, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-600001.
மின்னஞ்சல் : thannatchi@gmail.com

**க.சரவணன்**
தலைவர்
97512 37734

**நந்தகுமார் சிவா**
பொதுச் செயலாளர்
90032 32058

**25.01.2022**

**ஜனவரி-26 கிராமசபைக் கூட்டங்கள் ரத்து!**

**தன்னாட்சி கண்டன அறிக்கை!**

தன்னாட்சி, கிராம சபை/ஊராட்சி நிர்வாகம் குறித்த விழிப்புணர்வு, உள்ளாட்சிகளின் அதிகாரப் பரவல் குறித்து இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கானப் பயிற்சிகளை நடத்துதல், தமிழ்நாடு ஊராட்சிப் பிரதிநிதிகள் கூட்டமைப்பை ஒருங்கிணைத்தல் போன்ற பல்வேறு ஜனநாயகச் செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறது.

கொரோனா தொடங்கியதிலிருந்து அதைக் காரணம் காட்டி, மக்களாட்சிக்கு விரோதமாக கிராமசபைக் கூட்டங்கள் ரத்து செய்யப்படுவது வாடிக்கையாகி வருகிறது. அரசின் இந்தப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது. ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை.

ஜனவரி-26, 2020 கிராமசபைக் கூட்டங்களுக்குப் பிறகு, அக்டோபர்-2, 2021 அன்றுதான் கிராமசபைக் கூட்டங்கள் நடைபெற்றன. அதுவும் ஒரு ஊராட்சித் தலைவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்த பிறகே சாத்தியமானது. இந்தக் காலகட்டத்தில் கட்டாயம் நடக்க வேண்டிய 6 கிராமசபைக் கூட்டங்கள் நடக்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இப்படிப்பட்டச் சூழல் நிலவினால், ஊராட்சி நிர்வாகத்தை எப்படிச் செயல்படுத்துவது? பல்வேறு திட்டங்களுக்கு கிராமசபையின் ஒப்புதல் அவசியமெனும் போது, கிராமசபைக் கூட்டங்கள் நடத்தாமல் முடிவுகள் எப்படி எடுக்கப்படுகின்றன என்ற கேள்வியும் எழுகிறது.

2016-2019 காலகட்டத்தில், ஊரக உள்ளாட்சி தேர்தல்கள் நடக்காதச் சூழலில், ஊராட்சி நிர்வாகம் அலுவலர்கள் பிடியில் இருந்தது. ஊழல் குற்றச்சாட்டுகளும் எழுந்தன. இன்னமும் கூட பல ஊராட்சிகளில் அலுவலர்கள் ராஜ்யம்தான் நடக்கிறது என குற்றச்சாட்டு எழுகிறது. குறிப்பாக, மக்கள் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகும், அரசு கிராமசபைக் கூட்டங்களை நடத்த விடாமல் செய்வது, நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையை நீர்த்துப் போகச் செய்து, ஊழல் அதிகரிக்கவே உதவும். அரசு அதைத்தான் விரும்புகிறதா?

சட்டசபையை நடத்த முடிகிறது; டாஸ்மாக் கடைகளில் கூட்டம் அலை மோதுகிறது; வழிபாட்டுத்தலங்களில் மக்கள் பெருமளவு கூடுகின்றனர். இங்கெல்லாம் பரவாத கொரோனாத் தொற்று, கிராமசபைக் கூட்டங்களில்தான் பரவும் என்று அரசு நினைப்பது வேடிக்கைதான்.

முக்கியமாக, மாநில சுயாட்சி குறித்து இந்திய அளவில் உரக்கக் குரலெழுப்பும் ஒரு அரசு, அதிகாரத்தைக் குவித்து வைத்துக் கொண்டு, ஊராட்சிகளைக் கைப்பாவைகளாக நடத்துவது நிச்சயம் ஏற்கத்தக்கதல்ல.

பொதுவான கொரோனா கட்டுப்பாடுகளைக் கூட, பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், தொற்றுச் சூழலையொட்டி அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் முடிவெடுப்பதை அனுமதிக்கத் தமிழக அரசு முன் வர வேண்டும்.

முக்கியமாக, ஊராட்சிகளில் கிராமசபை நடத்தலாமா வேண்டாமா என்பதை அந்தந்த ஊராட்சிகள் முடிவெடுப்பதுதான் சரியாக இருக்கும். அடித்தளத்தில் உள்ள மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் எதுவும் தெரியாது என்ற ஆட்சியாளர்களின் மனோபாவம் ஜனநாயகத்திற்கு நிச்சயம் ஆபத்தானது; கண்டனத்திற்குரியது.

சமூக நீதியிலும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களிலும் முன்னோடி மாநிலமாக உள்ள தமிழ்நாடு, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான அதிகாரங்களை உறுதிப்படுத்துவதிலும் முன்னிலை வகிக்க வேண்டும்.

எனவே,

1. ஜனவரி-26 கிராமசபைக் கூட்டங்களை ரத்து செய்யும் முடிவை அரசு உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.

2. அனைத்து ஊராட்சிகளிலும் குடியரசு தின கிராமசபைக் கூட்டங்கள் நடப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

3. ஒத்த கருத்துள்ள ஜனநாயக சக்திகள், கிராமசபைகளை நடத்தக் கோரி குரலெழுப்ப வேண்டும்.

என்று தன்னாட்சி கோருகிறது.

(க.சரவணன்)
தலைவர்

(நந்தகுமார் சிவா)
பொதுச் செயலாளர்